# தோத்திரத் திரட்டு



நல்லூர் - கந்த சுவாமி கோவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
என்றும் சிவன்தாள் இணை"

# நித்திய வழிபாட்டுத்
# தோத்திரத் திரட்டு

வெளியீடு :

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம்

கைதடி

1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Start the day with Love**
**Spend the day with Love**
**Fill the day with Love**
**End the day with Love**

**This is the way to God.**

"BABA"

● **ஒவ்வொரு நாளையும்**

- அன்புடனே ஆரம்பித்து
- அன்புடனே செலவிட்டு
- அன்புடனே நிறைத்து
- அன்புடனே முடியுங்கள்

இதுவே இறைவனை அடையும்
நேர்பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்"

மானிடப்பிறவி பெறுதற்கரியது. கடவுளால் அருளப்பட்ட அந்தமில் இன்பச் செந்தமிழ் கொழிக்கும் நம் தமிழ்நாட்டிற் பிறத்தல் அதனினும் அரியது. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளைப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனை, அரும்பெரும் சோதியைச் சிவனெனப் பரந்த ஒரே இறைவனை வழிபடும் சைவசமயத்திற் பிறத்தல் அதனினுமரியது. இங்ஙனம்; பெறுதற்கரிய பிறவியைப்பெற்ற சைவசமயத்தவர்களாகிய நாம், கடவுள் வழியாடு செய்யும் முறை நியதியாய் இல்லை; லௌகீகப் பொருட்களில் மதி மயங்கி கடவுளை மறந்து அல்லவை செய்கின்றோம். உயிர்ப்பயம் ஏற்படும்பொழுதே முன்செய்த தீமைகளை எண்ணிக் கடவுளிடம் தஞ்சம் கேட்கின்றோம். வினை விதைத்துத் தினையறுக்க முடியாது. நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள இறைநினைவொன்றே உரிய வழி. இறைநினைவை உளத்தில் நிறைக்கும் திருவருட் பாடல்களைப் பொருளுணர்ந்து தினம் ஓதிவர, அறவழி ஒழுகித் திருநெறி நிலைக்கும்; தீமைகள் நெருங்காது என்பதில் ஐயமே இல்லை. பேருண்மை இறைசிவனைப் பாடிப் பணிந்து வருவதே மனிதப்பிறவியின் கடமை.

உளத்தை ஒருநிலைப்படுத்தவும் ஒரு நல்ல உபாயம் உண்டு. சைவசமயிகள் ஒழுங்கான முறையில் இறைவனை வழிபட, இனிய தமிழ்த் தோத்திரங்களைச் சமயகுரவர்கள் அருளியுள்ளனர்; வாரத்தின் ஏழு நாட்களுக்கும் ஏற்றவாறு; தேவாரம், திருவாசகம் முதலானவற்றைத் தொகுத்து 'நித்திய வழிபாட்டுத் தோத்திரத் திரட்டு' எனப் பெயரிட்டு அளித்துள்ளோம்.

சைவசயத்து ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தினந்தோறும் இசைத்து வழிபட்டுப் பயன்பெற எமது வீடும் நாடும் நலம்பெறும் என்பது எமது உறுதிமிகு நம்பிக்கையாகும்.

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், — ஆறுமுகம் கந்தையா
கைதடி. — பதிப்பாளர்
10-8-1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவ சிந்தனை

"நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க"

திருநாவுக்கரசு நாயனார் திருஅங்கமாலை பண்; சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
என்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பி ரான்றிறம் மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீ முரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புஞ்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறைக் கூத்தனல் லானமக்
குற்றா ராருளரோ. 10

இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# ஞாயிற்றுக்கிழமை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பண்; நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடு டையசெவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய
பெம்மா னிவனன்றே.

பண்: கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலன்ஈங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயரன் நிற்கவே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் : திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா பண்: பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

சேந்தனார் திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

நல்ல சொற்பொருள் நாளு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

மாதர் வசமாயுற் றுழல்வாரும்
மாதவ மெணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநகர மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில் கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்கட்கிழமை

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் தனித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையா யென்நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

பண்: காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான்
மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா
ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா
றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு
வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி
யாதன கண்டேன்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநந் துருகி நெக்குநெக்(கு)
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனார் திருவிசைப்பா பண்: பஞ்சமம்

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

பூமலர் மிசைவரு புனித னாதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

அற்றைக் கிரைதேடி
அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத
பற்றைப் பெறுவேனா
வெற்றிக் கதிர்வேலா
வெற்பைத் துளைசீலா
கற்றுற் றுணர்போதா
கச்சிப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிழமை

**சுந்தரமூர்த்தி நாயனார்** தேவாரம் **பண்: தக்கேசி**

**திருச்சிற்றம்பலம்**

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயிர் அதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியின்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

**பண்: செந்துருத்தி**

மீளா அடிமை உமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

**மாணிக்கவாசக சுவாமிகள்** திருவாசகம் : **நீத்தல் விண்ணப்பம்**

கடையவ னேனைக் கருணை யினாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதி கண்டாய் விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னு முத்தர கோச மங்கைக் கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத்
[தாங்கிக் கொள்ளே.

**திருமளிகைத்தேவர்** **திருவிசைப்பா** **பண்: பஞ்சமம்**

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரர் சேகரனே
நுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா நுகரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனார் திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சேக்கிழார் திருப்புராணம்

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

வசன மிகவேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசைபயில் சடாக்ஷ ரமதாலே
இகபர செளபாக்ய மருள்வாயே
பசுபதி சிவாக்ய முணர்வோனே
பழனிமலை வீற்ற ருள்வேலா
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர் சிறைமீட்ட பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

✶ தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்கிழமை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பண்; நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

பண்: தக்கேசி

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சாரல்
அண்ணா மலையாரே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் : யாத்திருப்பதிகம்

உடையா ளுன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா பண் : பஞ்சமம்

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழங் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

சேந்தனார் திருப்பல்லாண்டு பண் : பஞ்சமம்

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளள வில்லதோர்
ஆநந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

சேக்கிழார் திருப்புராணம்

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி.

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

இர வுபகல் பலகாலும்
இயலிசைமுத் தமிழ்கூறித்
திர மதனைத் தெளிவாகத்
திருவருளைத் தருவாயே
பர கருணைப் பெருவாழ்வே
பரசிவதத் துவஞானா
அர னருள்சற் புதல்வோனே
அருணகிரிப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோடு தொடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

தனித்திருத்தாண்டகம்

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் : வாழாப்பத்து (முத்தி உபாயம்)

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

சேந்தனார் திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மிமிகு
திருவா ரூரில்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. [பால்

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

தத்தனா தானனத் தனதானா

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை

**சுந்தரமூர்த்தி நாயனார்** **தேவாரம்** **பண்: பழம்பஞ்சுரம்**

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

**திருத்தொண்டத் தொகை** பண்: **கொல்லிக்கௌவாணம்**

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

**மாணிக்கவாசக சுவாமிகள்** **திருவாசகம்** **(பிடித்தபத்து)**

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**திருவிசைப்பா**

புவன நாயகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொலியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனி ஞாயிறுபோன் றருள்புரிந் தடியேன்
அகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலுமயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலுமமுதமு மொத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
இருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்வாம்.

திருப்புகழ்

தையதன தானத் தனதானா
தையதன தானத் தனதானா

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பண்: பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பண்: சீகாமரம்

மண்புகார் வான்புகுவார் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருு ளாயே.

சேந்தனார் திருவிசைப்பா பண்: பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

திருப்பல்லாண்டு — பண்: பஞ்சமம்

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும்விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

கச்சியப்ப சிவாசாரியர் — கந்தபுராணம் (வள்ளியம்மை திருமணப் படலம்)

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

அருணகிரிநாத சுவாமிகள் — திருப்புகழ் (தகதகிட நடை)

எறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனொடு ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

1. இறைவா, 'உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்.' உம்மை மறக்கச்செய்யும் எந்த ஒரு பொருளும் என்னை அணுகாது பாதுகாத்து அருள்க.

2. உமது திருவருளை நினைவூட்டும் ஓர் அற்பப் பொருளையும் யான் போற்றி மகிழ்வேனாக.

3. காமம், சினம், ஆசை, கருமித்தனம், கயமை ஆகிய கொடும்பேய்களெல்லாம் என்னுள்ளத்தில் புகுந்து என்னைக் களங்கப்படுத்தித் துயரைத் தராமற் காத்தருள்க.

4. கருணையாம் உமது அருள் வெள்ளத்தில் யான் அமிழ்ந்து மூழ்குவேனாக.

5. செய்யும் செயல்களுக்கு யான் அதிகாரி இல்லையென்று உணர்த்துவீராக.

6. நன்மையும் தீமையும் இறைவன் அருளாலேயே நிகழ்கின்றன என்று நாடுவேனாக.

7. வையம், நீர், ஒளி, காற்று, வானம் அனைத்தையும் உணர்ந்த அளவாயினும் என்னுயிரையே உணராதவன், புன்மைதரும் புவனப் பொருள்களையெல்லாம் விரும்பாது ஒழிவேனாக.

8. எத்தகையவராயினும் உமது அடியாரை நீர் என எண்ணிப் போற்றுவேனாக

9. என் உடல், பொருள், உயிர் அனைத்தையும் உமக்கே அர்ப்பணம் செய்தேன்.

10. ஏற்றென்னைக் காத்தருள்வீர்! காத்தருள்வீர்!! காத்தருள்வீர்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடுவோர்:
அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி (இலங்கை)

விலை ரூபா 20.00

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org